# உங்கள் குழந்தையின் சுற்றாடல்னந ளர டிநடிபூ

உங்கள் குழந்தையின் ஆர்வத்தைக் கவரக்கூடிய பல்வேறு வகைப் பொம்மைப் பொருட்களை அதற்கு வழங்குங்கள். சில நாட்களுக்கு ஒரு முறை பொம்மைகளை மாற்றிக் கொடுத்தால் பொம்மைகளை நீங்கள் “புதிதாக்கும்” உணர்வு குழந்தைக்கு ஏற்படும். சிறித காலமாகக் கண்ணில் படாத பொம்மைகளை குழந்தை மீண்டும் புதிதானவையாக ஏற்றுக் கொள்கிறது.



இந்தக் கட்டத்தில் உங்கள் குழந்தை உருண்டு, மார்பால் ஊர்ந்து அல்லது தவழ்ந்து சுற்றி வர ஆரம்பிக்கும். சில குழந்தைகள் நடக்க ஆரம்பிக்கும். இச்சந்தர்ப்பத்தில் குழந்தை பாதுகாப்பான முறையில் தனது புதிய சூழலைத் துருவி ஆராய்வதற்கு அதற்கு அளவில் பெரிதான ஒரு விளையாட்டுப் இடம் தேவைப்படுகிறது.




## ஏன் இந்த விளையாட்டு?

விளையாடுதல் பிள்ளைகளுக்கு ஏதோ ஒன்றைக் கற்று அறிந்து கொள்ள உதவும் ஓர் அனுபவமாகவே இருக்கிறது. விளையாட்டு ஒவ்வொரு பிள்ளையின் விருத்திக்கும் மிகவும் அத்தியாவசியமான உலகளாவிய முறையில் நடைபெறும் ஒரு செயல்முறை ஆகும். விளையாட்டு என்பது ஒரு பிள்ளை தான் வாழுகின்ற, வளருகின்ற உலகினைத் ஆராய்ந்து அறிவதற்கு உதவியாக இருக்கிறது.

விளையாட்டுக்காக ஏற்படுத்தப்படும் திட்டங்கள் பாதுகாப்பான ஊக்கமளிக்கின்ற ஒரு சூழலில் வயதுக்கு வந்த பெரியவர்களும் பிள்ளைகளும் ஒன்று சேர்ந்து விளையாடக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்கின்றன. ஒன்றாக இதில் ஈடுபடும்பொழுது பெரியவர்களும் பிள்ளைகளும் ஒரு பகுதியினரின் செயல்முறைகளில் மற்றப்பகுதியினர் ஆர்வம் கொள்ள ஆரம்பிப்பதுடன் இருபகுதியினரும் தொடர்பாடல் செய்யும் முறையையும் கற்றுக் கொள்கின்றனர். பொருட்களைப் பகிர்ந்து கொள்ளும் பழக்கம் மற்றும் வளர்ச்சி என்பவற்றை விளையாட்டு பேணி வளர்க்கிறது.

பிள்ளைகள் விளையாட்டில் தமது அனுபவத்தையும் கற்று அறிவதையும் சிறப்பாக அமையும்படி செய்வதற்குப் பயன்படுத்தும் அடிப்படைக் கருவிகளாகப் பொம்மைகள் (toys) அமைகின்றன. விளையாடுவதற்கு “மிகச்சரியான” ஒரு பொம்மைப் பொருள் என்று எதுவும் இருப்பதில்லை. பிள்ளைகளுக்கு அவர்களின் விருத்தி நிலை, ஆர்வங்கள் மற்றும் செயல் திறமைகள் என்பவற்றுக்குப் பொருந்துகின்ற முறையில் பல்வேறு வகையான பொம்மைகள் தேவைப்படுகின்றன. மழைநாட்களில் பயன்படுத்தும் பொம்மைகள், நண்பர்களுடன் சேர்ந்து சுறுசுறுப்பாக வெளிப்புறத்தில் விளையாடுவதற்கான பொம்மைகள், சுகவீனமுறும் நாட்களிலும் விடுமுறைநாட்களிலும் விளையாட உதவும் பொம்மைகள் மற்றும் பகிர்ந்து கொள்ளல், கூட்டுமுயற்சி என்பவற்றை ஊக்குவிக்கும் பொம்மைகள் என்று பலவகைப் பொம்மைகள் அவர்களுக்குத் தேவைப்படுகின்றன. உங்கள் பிள்ளைக்கு என்று பொம்மைகளை நீங்கள் தெரிவு செய்யும் பொழுது உங்கள் பிள்ளையின் தனித்துவமான தேவைகளையும் ஆர்வங்களையும் மனதில் எண்ணிக்கொள்ளுங்கள்.

“ஏன் இந்த விளையாட்டு?” என்று ஒரு தொடர்முறையில் வெளியிடப்பட்டுள்ள பிரசுரங்கள் பின்வரும் வயதுப் பிரிவுகளில் உள்ள பிள்ளைகளுக்குப் பொருத்தமான விளையாட்டுச் செயல்முறைகளை பரிந்துரைக்கின்றன.

| | |
|---|---|
| 0-6 மாதங்கள் | 2-3 வருடங்கள் |
| 6-12 மாதங்கள் | 3-4 வருடங்கள் |
| 1-2 வருடங்கள் | 4-5 வருடங்கள் |

இத்தகவல் பிரசுரங்களை ஒரு தொகுதியாக வாங்குவதற்கும் மற்றும் பிற வெளியீடுகளுக்கும் உரிய விலை விபரங்களை பெறுவதற்கு நாடுங்கள்:


FRP CANADA
707 - 331 rue Cooper Street, Ottawa, ON K2P 0G5
(613) 237-7667
1-866-637-7226
1-866-6-FRPCAN
(613) 237-8515
info@frp.ca
www.frp.ca
www.welcomehere.ca
www.bienvenuechezvous.ca


Tamil/Tamoul

# ஏன் இந்த விளையாட்டு ?

6-12 மாதங்கள

FRP CANADA

# விளையாட்டு என்பது...

- கண்டு பிடித்தல்
- துருவி ஆராய்தல்
- சேர்ந்து பழகுதல், பெரும்பாலும் பெரியவர்களுடன்
- அசைதல்
- பிரச்சினை தீர்த்தல்
- செய்து பயிலுதல்



உங்கள் பிள்ளையின் விருத்தி நிலையை மனதில் கொண்டு பொம்மைகளைக் கவனமாகத் தெரிவு செய்யுங்கள்.

கையால் பிசையும் பொழுது கீச்சிடுவதுபோல் ஒலி எழுப்புகின்ற பிளாஸ்திக்குப் பொம்மைகளை உங்கள் குழந்தைக்குக் கொடுங்கள். குழந்தை தானும் ஒலிகளை எழுப்ப இந்த அனுபவம் அதனைத் தூண்டுவதுடன் குழந்தை தனது குரலையும் காதால் கேட்க முடிகிறது.



“பலவேலைப் பெட்டி” (busy box) அல்லது செயல்பாட்டு நிலையம் (activity centre) ஒன்றை உபயோகிக்கையில், மிகப் பல இடங்களில் அழுத்தியும் அசைத்தும் ஒலிகளைக் கேட்கும் சந்தர்ப்பம் குழந்தைக்குக் கிடைக்கிறது.



குழந்தை கையால் தொடவும் அங்குமிங்கும் தள்ளி நகர்த்தவும் கூடிய கட்டிகளை (blocks) உங்கள் குழந்தைக்கு கொடுங்கள். குழந்தை ஒரு கையில் இருந்து மற்றக் கைக்கு அவற்றை இடம்மாற்றம் செய்யவும் அதனை ஊக்குவியுங்கள்.



உங்கள் குழந்தை தவழத் தொடங்கியதும் சில்லுகள் பொருத்திய ஒரு பொம்மையை அல்லது ஒரு பந்தினை நிலத்தின் மேல் ஓடவிட்டுப் பின்தொடர்ந்து மகிழும்.

எளிதான சங்கீதக் கருவிகளை உங்கள் குழந்தையுடன் இருந்து வாசிக்கும் பொழுது அக்குழந்தை பலவகையான ஒலிகளை வேறுபடுத்தி அறியப் பழகிக் கொள்வதற்கு அது உதவும்.



“ஒழித்து மறைந்து பின்பு முகத்தை வெளிக்காட்டும்” (peek a boo) விளையாட்டைக் குழந்தையுடன் சேர்ந்து விளையாடுங்கள். திடீரெனத் தலைநீட்டும் பொம்மையை (pop-up toys) உங்கள் குழந்தைக்கு இயக்கிக் காட்டி அதன் ஞாபக சக்தியை விருத்தி செய்ய உதவுங்கள்.



படங்களுடன் கூடிய எளிதான உரை கொண்ட புத்தகங்களை குழந்தைக்கு வாசித்துக் காட்டுங்கள். குழந்தை காணக்கூடியதாக இருக்கும் சாதாரண பொருட்களைச் சுட்டிக் காட்டுங்கள்:
உதாரணமாக – பாப்பா, கோப்பை, கார், நாய், பூனை.

## குழந்தைகளுடன் நீங்கள் ஈடுபடக்கூடிய செயல்பாடுகளுக்கான சில யோசனைகள்

பல்வேறு வகையான பொருட்களில் இருந்து வெவ்வேறு வடிவங்களில் துண்டுகளை வெட்டி எடுங்கள். உதாரணம்: கம்பளித்துணி, அரத்தாள், பட்டுத்துணி. உறுதியான ஒரு அட்டையில் அவற்றைக் கழன்று விடாதபடிக்கு ஒட்டுங்கள். உங்கள் குழந்தையின் கையை ஒட்டிய துண்டுகளின் மீது தொடும்படி வைத்து ஒவ்வொன்றின் தொட்டுணர்வு இயல்பினையும் (வநஒவரசந) கரடுமுரடு, சீரான அழுத்தம், மெதுமை போன்ற வார்த்தைகளால் விபரிக்கவும்.



ஒரு பிளாஸ்திக்குத் தொட்டி அல்லது வாளியில் 15 செ.மீ. (6 அங்குலம்) அளவுக்கு தண்ணீர் நிரப்புங்கள். தண்ணீரில் மிதக்கக் கூடிய பொம்மைப் பொருட்களான ஓடங்கள், பிளாஸ்திக்குப் பாத்திரங்கள், இரப்பரால் செய்த வாத்துகள், சிறிய பிளாஸ்திக்கு வாளிகள் போன்றவற்றை மிதக்க விடுங்கள். உங்கள் குழந்தை நீரினை எற்றி எறிந்து விளையாடுவதில் மகிழ்ச்சியைக் காணுகிறது. நீரில் விளையாடுவது மனதுக்கு அமைதி தரும் ஒரு செயல்பாடாக இருக்கும்.

உங்கள் குழந்தையை மடியில் உட்காரவைத்து அதனை மேலும் கீழுமாக தூக்கிப்போட்டு அசைத்தவாறு இவ்வாறான ஓர் ஒத்த ஒலிப் பாடலைப் பாடுங்கள்: “குதிரை ஓடுது பாருங்கள், கடக் - கிளக் - கடக் - கிளக் - கடக்”.

